ஸியலும ஹிமிகம் ஆவிரிணி
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## வரலாறு - ඉතිහාසය

தரம் : **8** நேரம்: 2 மணித்தியாலம்

பெயர் /சுட்டெண்:

**பகுதி** I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

♦ 1 தொடக்கம் 5 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்க.

1. இலங்கையின் முதல் நீர்ப்பாசனத்திட்டமாக இனங் காணப்பட்டுள்ள அபயவாவியை தற்பொழுது அழைக்கும் பெயர் யாது?
   1) ஜயவாவி 2) திஸாவாவி 3) பசவக்குளம் 4) காமினி வாவி

2. இயற்கையான கற்பாறையின் மீது அணையொன்றைக்கட்டி உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கம் யாது?
   1) கலாஓயா 2) யான்ஓயா 3) மல்வத்து ஓயா 4) மீ ஓயா

3. மத்தியகால இறுதியில் இத்தாலியில் தோற்றம் பெற்ற பல்கலைக்கழகம் யாது?
   1) ஒக்ஸ்போட் 2) பரிஸ் 3) கேம்பிரிஜ் 4) பொலஞ்ஞோ

4. மலையக இராசதானியின் முதல் மன்னனாகக் கருதப்படுபவர் யார்?
   1) கரலியத்த பண்டார 2) சேனா சம்பத்த விக்ரமபாகு
   3) ஜயவீர பண்டார 4) யமசிங்க

5. தலதா மாளிகைக்கு மனங்கவர் பத்திரிப்பு என்று அழைக்கப்படும் எண்கோண மண்டபத்தைக் கட்டிய மன்னன் யார்?
   1) கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் 2) முதலாம் விமலதர்ம சூரிய மன்னன்
   3) ஸ்ரீ விக்ரம ராஜசிங்க மன்னன் 4) இரண்டாம் விமல தர்ம சூரிய மன்னன்

♦ கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் **(X)** எனவும் அடைப்பினுள் இடுக.

6. ஜயகங்கை அல்லது யோதக்கால்வாய் முதலாம் அக்ரபோதி மன்னனால் வெட்டப்பட்டது ( )
7. மகாமேகவனப் பூங்கா மூத்தசிவ மன்னனால் உருவாக்கப்பட்டது ( )
8. மெதிரிகிரிய வட்டதாகே தற்பொழுது எஞ்சியிருக்கும் கலைத்திறன் மிக்க நிர்மாணிப்பாகும் ( )
9. ஜொஹர்னஸ் குட்டம் பேர்க் என்பவரால் அச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டது ( )
10. ராஜாதி ராஜசிங்க மன்னன் வெலிவிட்ட ஸ்ரீ சரணங்க தேரரை சங்கராஜ பதவிக்கு நியமித்தார் ( )

.

♦ 11 - 15 வரையுள்ள வினாக்களுக்கு அடைப்பினுள் தரப்பட்டுள்ள விடைகளில் சரியானதைத் தெரிந்தெடுத்து இடைவெளியை நிரப்புக.

11. ஸ்ரீ விக்ரம ராஜசிங்க மன்னனை ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டு இந்தியாவில் ....................................... கொண்டு செல்லப்பட்டது.

12. வருடம் தோறும் தலதா பெரஹராவை நடத்துவதற்கு ஏற்பாடு செய்த மன்னன் .......................................... ஆவார்.

13. கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த முதலாவது நாயக்க வம்ச அரசன் .............................. ஆவார்.

14. இராசரட்டைக்குரிய கலைத்திறன் மிக்க தூபிமனை ............................................. ஆகும்

15. மத்திய கால இறுதியில் இங்கிலாந்தில் தோற்றம் பெற்ற உயர்கல்வி நிறுவனம் ............................. பல்கலைக்கழகமாகும்.
(செனரத், ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன், நரேந்திர சிங்கன், கோவா, வேலூர், கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன்)

♦ 16-20 வரையான வினாக்களுக்கு பகுதி **A** யிலுள்ள தகவல்களை பகுதி **B** யுடன் இணைப்பதனூடாகப் பெறப்படும் சரியான விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

16.

| **A** | **B** |
|---|---|
| 1) மின்னேரியாக்குளம் | A. காணுவாவி |
| 2) ஹுருளுவாவி | B. மணிஹிரவாவி |
| 3) மகாகணதராவாவி | C. ஜல்லூர வாவி |
| 4) மகாவிலாச்சியாக்குளம் | D. மயென் |

1) DCBA 2) BDAC 3) BCAD 4) CBDA

17.

| A | B |
|---|---|
| 1) கொனப்பு பண்டார | A. செனரத் |
| 2) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் | B. சேனா சம்பத விக்ரமபாகு |
| 3) இரண்டாம் இராஜசிங்கன் | C. வீர சுந்தர பண்டார |
| 4) ஜயவீர பண்டார | D. இரண்டாம் விமலதர்ம சூரியன் |

1) DBCA 2) ADBC 3) CBAD 4) CDAB

18

| A | B |
|---|---|
| 1) பர்மாவிலிருந்து உபசம்பதா கொண்டுவரல் | A. 2ம் இராஜசிங்கன் |
| 2) கன்னொருவ போரை வெற்றிகொள்ளல் | B. கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் |
| 3) சீயம் நிக்காய ஆரம்பம் | C. ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் |
| 4) 'பாற்கடல்' எனும் குளம் நிர்மாணித்தல் | D. 1ம் விமல தர்மசூரியன் |

1) DABC 2) BCDA 3) ABCD 4) BACD

19.

| A | B |
|---|---|
| 1) ஆலாஹனா பிரிவெனா | A. மரச்செதுக்கல் |
| 2) அம்பக்க தேவாலயம் | B. குட்டம் பொய்கை |
| 3) சீகிரியா | C. வைத்திய சாலை |
| 4) அபயகிரி | D. நீர்ப்பூங்கா |

1) ADBC 2) DCAB 3) CADB 4) BACD

20.

| A | B |
|---|---|
| 1) மனித உடலும் குதிரைத்தலையும் | A. தெதிகம |
| 2) கொட வெஹெர | B. வெஹரகல |
| 3) அவலோ கேதீஸ்வர போதிசத்துவ சிலை | C. கண்டி |
| 4) டெம்பிட விகாரை | D. இசுறுமுனிய |

1) CDBA 2) BCDA 3) ABDC 4) DABC

(2 X 20 = 40 புள்ளிகள்)

## பகுதி II

♦ முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.


1. A. i) இவ்வுருவில் காட்டப்பட்டிருப்பது யாது?

ii) இது எங்கு அமைந்துள்ளது?

iii) இது எதற்காகக் கட்டப்பட்டது?

iv) இக்கட்டிடத்தின் கூரை எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது?

(4 புள்ளி)



B. i) இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளதைப் பெயரிடுக.

ii) இது எக்காலத்திற்குரிய கட்டடமொன்றாகும்?

iii) இது எந்த விகாரை நிர்மாணிப்பைத்தழுவி அமைக்கப்பட்டது?

iv) இதன் பயன்பாடு யாது? (4 புள்ளி)



C. i) இவ்வுருவில் உள்ள மன்னனைப் பெயரிடுக.


ii) இவர் அரசனாவதற்கு முன் அழைக்கப்பட்ட பெயர் யாது?

iii) இவர் ஆட்சி செய்த இராச்சியம் எது?

iv) இவர் ஆட்சிக்கு வருவதற்கு உதவிய பிரதம பிரதானி யார்? (4 புள்ளி)



D. பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரை பூரணப்படுத்துக.




இடமிருந்து வலம்

1) இராசரட்டையில் காணப்படும் புராதன பொய்கை

2) திசாவாவி மூலம் நீரைப்பெறும் பூங்கா

மேலிருந்து கீழ்

3) கலிங்க மாகனால் அழிக்கப்பட்ட இராச்சியம்

4) சீகிரியாக் குகையினுள் இதனைக் காணலாம்

(4 புள்ளி)

2. i) அநுராதபுர யுகத்தில் மகாவாவிகளை நிர்மாணித்த மன்னர்கள் மூவரைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

ii) பின்வரும் குளக்கூறுகளின் பயன்களைக் குறிப்பிடுக.

1) கலிங்கல் தொட்டி 2) கலிங்கல்

3) அலைதாங்கி 4) வெளிவான் கதவு (4 புள்ளி)

3. i) புராதன இலங்கையின் உலோகக் கைத்தொழிலில் ஈடுபட்ட பின்வரும் நபர்கள் யாவர்?

1) கபர 2) தம்பர 3) தோபஷ (3 புள்ளி)

ii) புராதன காலத்தில் அமைக்கப்பட்ட பொய்கைகள் 4 குறிப்பிடுக. (4 புள்ளி)

iii) நீர்ப்பூங்காக்களின் சிறப்பம்சங்கள் 2 இனைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

4. i) பின்வரும் தூபிகளை நிர்மாணித்த மன்னர்களைப் பெயரிடுக.
   1) தூபாராம  2) ஜேதவனராம  3) தெமல மாகாசாய (3 புள்ளி)

   ii) இராசரட்டை நாகரிக காலத்தில் இந்நாட்டில் நிர்மாணிக்கப்பட்ட சமய சார்பற்ற கட்டங்கள் 4 குறிப்பிடுக. (4 புள்ளி)

   iii) பின்வரும் நிர்மாணிப்புக்களுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.
   1) அநுராதபுர நகருக்கு வெளியே கட்டப்பட்ட தாது கோபுரம்
   2) மெதிரிகிரிய வட்டதாகே தவிர்ந்த தூபி மனை
   3) புராதன வைத்தியசாலை அமைந்த இடம்
   4) போதிசத்துவ சிலை காணப்பட்ட இடம் (4 புள்ளி)

5. i) கண்டி இராச்சியத்துக்கு வழங்கப்பட்ட வேறு மூன்று பெயர்களைக் குறிப்பிடுக.(3 புள்ளி)

   ii) பின்வரும் தகவல்களுக்குரிய மன்னர்களைக் குறிப்பிடுக.
   1) மலையக இராச்சியத்தின் முதல் மன்னன்
   2) இறுதி சிங்கள மன்னன்
   3) நாயக்க வம்சத்து இறுதி மன்னன்
   4) மகா அஸ்தான குமாரன் (4 புள்ளி)

   iii) 1ம் விமலதர்ம சூரிய மன்னனின் சேவைகள் நான்கு தருக. (4 புள்ளி)

6. i) மறுமலர்ச்சிக் காலத்தில் பின்வரும் துறைகளில் புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொண்ட நபர்கள் ஒருவர் வீதம் தருக.
   1) சித்திரக்கலை
   2) சிற்பக் கலை
   3) கட்டடக்கலை (3 புள்ளி)

   ii) கி.பி. 14ம் நூற்றாண்டு தொடக்கம் 16ம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் கலை, விஞ்ஞானத் துறைகளில் ஏற்பட்ட பாரிய மாற்றம் மறுமலர்ச்சி என கூறப்படும். இதற்குச் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் நான்கைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

   iii) மறுமலர்ச்சிக்கு முற்பட்ட கால கலைப்பணிகளின் இயல்புகள் 2 இனையும் மறுமலர்ச்சிக்கால கலைப் பணிகளின் இயல்புகள் 2 இனையும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடுக.

| மறுமலர்ச்சிக்கு முற்பட்ட கால கலைப்பணிகளின் இயல்புகள் | மறுமலர்ச்சிக் கால கலைப்பணிகளின் இயல்புகள் |
|---|---|
| 1.................................................... <br> 2.................................................... | 1.................................................... <br> 2.................................................... |